[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

தலைமைப் பொறியாளர் (தேசீய நெடுஞ்சாலை) ரெயில்வேயின் பணி முடிந்த பிறகு விடப்பட்ட பகுதியில் தார் மேற்பரப்பு ஏப்ரல் 1972-ம் வருடத்திற்குள் போடப்பட்டு விடும் என்று கூறுகிறார். மேலும், தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) அவர்கள் தேசீய நெடுஞ்சாலை வழியாக நெல்லூருக்கு நேரிடை போக்குவரத்து ஏப்ரல் 1972 இறுதிக்குள் ஆரம்பமாகும் என்றும் கூறுகிறார்.

தாமதம் பற்றிச் சொன்னார்கள். இந்தப் பணிகளுக்காக டெண்டர்கள் கோரப்பட்டு, 7-2-1967-ல் ஒப்பந்தம் எழுதப் பட்டது. நில ஒப்படைப்பில் ஏற்பட்ட காலதாமதத்தின் காரணமாக அவர்கள் தங்கள் டெண்டரை திரும்பப் பெற்றுக் கொண்டுவிட்டனர். பின்னர் மறுபடியும் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, 1970 சனவரி மாதம்தான் ஒப்பந்தம் ஏற்பட்டது எல்லா வேலைகளும் முடிவடைந்து 1972 ஏப்ரல் இறுதிக்குள் நேரிடைப் போக்குவரத்து ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

4. அறிக்கை அளித்தல்

"நாத்திகம்" நாளிதழ் மீதான உரிமை மீறல் பிரச்சினையில் உரிமைக் குழுவின் இடைக்கால அறிக்கை

THIRU P. SEENIVASAN: I rise to present the interim report of the Committee of Privilege on the matter of privilege raised against the Tamil daily 'Nathigam' in regard to certain comments published in its issue, dated 10th March 1972.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவை (தணிப்பு) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவை (தணிப்பு) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

[மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்]

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவை (தணிப்பு) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு பேரவை முன் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலவுடைமைக்கு உச்ச வரம்பு வரையறுத்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலவுடைமைக்கு உச்சவரம்பு வரையறுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலவுடைமைக்கு உச்சவரம்பு வரையறுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு பேரவை முன் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(இ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு. அனுமதி வழங்கப்பட்டது.

1972 மார்ச் 28]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு பேரவை முன் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஈ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு பேரவை முன் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(உ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வர்த்தகம் அல்லாத நிறுவனங்கள் சட்டமுன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 1972-ம் ஆண்டு வர்த்தகம் அல்லாத நிறுவனங்கள் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்ட முன் வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு பேரவை முன் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.